# யாழ்மாவட்டத்தில் உள்ள சிங்கள பொலிசார் கட்டம் கட்டமாக தெற்கிற்கு அனுப்பப்படுவர்


பக்கங்கள் பத்து | விலை ரூபா: 3-00

# முரசொலி

முரசு 04 ஒலி 73 வியாழன் 19-04-1990 (சித்திரை 06) ரமழான் 22


யாழ் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் கடமைபுரியும் சிங்களப் பொலிஸார் கட்டம் கட்டமாகவே தென்பகுதிக்கு அனுப்பப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது. பின்னர் இங்குள்ள சகல பொலிஸ் முகாம்களிலும் தமிழ்ப்பொலிஸார் மட்டுமே கடமைபுரிவார்கள், அத்துடன் தற்போது கடமையிலுள்ள சிங்களப் பொலிஸார்கள் பொலிஸ் நிலையங்களை விட்டு வெளியே வரமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. சிங்களப் பொலிஸாரை உடனடியாக தென்பகுதிக்கு அனுப்பிவைப்பதில் பல சிரமங்கள் உள்ளதாகவும் போதியளவு தமிழ்ப்பொலிஸார் சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரே சகல சிங்களப் பொலிஸார்களும் தென்பகுதிக்கு மாற்றப் படுவார்கள் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (03)



## மக்கள் சக்தி பின்னல் இருக்கும்வரை எந்தச் சவாலையும் சந்திக்கத் தயார்

மலைபோல் மக்கள் சக்தி எமக்கு பின்னல் இருக்கும் வரைஎந்தப் புதிய சவாலையும்நாம் சந்திக்கத் தயார்' இலச்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கி விடமுடியாது இவ்வாறு விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரன் அன்னைபூபதியின் தியாக மரணதினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது "எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே: இன்று நாம் ஒரு மகத்தான தியாகியை அந்தத் தியாகியின் அற்புதமான அர்பணிப்பை நினைவு கூர்ந்து எமது இதய அஞ்சலியை செலுத்தி நிற்கின்றோம். 5ம் பக்கம் பார்க்க

# இடைக்கால சபை நிர்வாகத்தை விடுதலைப்புலிகள் ஏற்கமாட்டார்கள்


## மக்கள் மூலம் தெரிவுசெய்யப்படுவதையே விரும்புகிறோம் என்கிறார் பாலசிங்கம்

வடக்கு கிழக்கு மகாணத்திற்கான இடைக்கால சபை நிர்வாகம் ஒன்றை விடுதலைப் புலிகள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று முரசொலிக்குத் தெரிவித்தார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகவே நாம் மாகாணசபையில் பிரதிநிதிப்படுத்தப்பட விரும்புகின்றோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்களைக் கொண்டு அமைக்கப்படும் எந்த ஓர் நிர்வாக அமைப்பிலும்விடுதலைப் புலிகள்பங்குபற்றமாட்டார்கள் அப்படியான முயற்சிகளை விடுதலைப்புலிகள் தீவிரமாக எதிர்க்கும் எனவும் அவர் கூறினர்

கொழும்புப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த இடைக்கால சபை நிர்வாகம் குறித்த செய்தி குறித்துகேட்டபோதே அவர் இவ்வாறு கூறினர்

வடக்குகிழக்கு மாகாண சபையை கலைப்பதற்குமுன்னர் சகல கட்சிகளும் பங்குபற்றும் இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்ததிட்டமிடப் படடுள்ளது என்றும் இதற்கு விடுதலைப்புலிகளின் சம்மதத்தையும் அமைச்சர் ஹமீத் —ஆ10ம் பக்கம் பார்க்க



## விடுதலைப்புலிகள்மகளிர்முன்னணி அன்னை பூபதி நினைவு அறிக்கை

'இன்று...ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்திகளத்தில் இறங்கியுள்ளனர் பல்லாயிரக்கணக்கான பெண்கள் எமது தேசத்தையும், மக்களையும் விடுவிப்பதற்காக தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணிக்க முன்வந்துள்ளனர் எமது தாயகத்தின் விடிவிற்காக தன்னுயிரைத் தியாகம் செய்த தன் மூலம் இவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாய் விளங்கியவர் ஐம்பத்தெட்டு வயதுடைய அன்னையர் திலகம் பூபதி கணபதிப்பிள்ளை அவர்கள்'

இவ்வாறு விடுதலைப் புலிகள் — 10ம் பக்கம் பார்க்க

## மட்டு, வன்னி, திருமலை, நல்லூரில் இன்று எழுச்சி விழாக்கள்

வடகிழக்கில் தியாக மரணமடைந்த அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு எழுச்சி விழாக்கள் இன்று நல்லூரிலும், திருமலை, வன்னி மட்டுநகர் பகுதிகளில் நடைபெறவுள்ளன.

இன்று மாலை நல்லூர் கூட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய பிரமுகர்கள்உரையாற்றுவார்கள். இந்தியப்படையின் அட்டூழியங்களை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளை கொண்ட பவனி திருமலையில் நடைபெறவுள்ளது,

வவுனியாவில்நடைபெறும்சகல ஊர்வலங்களும் நகரசபையை வந்தடைந்ததும் மாபெரும் பொதுக்கூட்டம்ஒன்றும் நடைபெறும்.

...10 ஆம் பக்கம் பார்க்க

## ஊனமுற்றோர் விபரம் சேகரிப்பு

ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கம் வடகிழக்குப்பகுதிகளில் ஊனமுற்றோர்களின் முழு விபரங்களையும் சேகரித்து வருகின்றது

ஏற்கனவே ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தொழில் முயற்சிகளுடன் மேற்படி புதிதாக விபரம் சேகரிக்கப் படுபவர்களுக்கும் புதிய தொழில்முயற்சிகள் வழங்கபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (03)

## எரிபொருள் ரயில் வந்தது பெற்றோல் தட்டுப்பாடு நீங்கும்

நேற்று இரவு எரிபொருள் அடங்கிய ரயில் யாழ் வந்து சேர்ந்தது. கடந்தசில நாட்களாக இங்கு நிலவிய எரிபொருள் தட்டுப்பாடு இன்று நீங்கி விடும் என தெரிய வருகிறது.

நேற்று யாழ் நகரில் ஒரு போத்தல் பெற்றோல் கறுப்புச் சந்தையில் நாற்பது ரூபாவுக்கும் அறுபது ரூபாவுக்கும் இடையில் விற்பனையானமை குறிப்பிடத்தக்கது.

## 'மட்டு.பொலிஸ் ஆட்சேர்ப்பு இன்று நேர்முகப் பரீட்சை

மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் றிசேவ் பொலிஸ் கான்ஸ்டபிள் நேர்முகப் பரீட்சை இன்று நடைபெறவுள்ளது.

இதுவரை 300 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனவும் விண்ணப்பிக்கதவறியவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் அளிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (05)

### வடக்கு கிழக்குப் பகுதியிலுள்ள

## 15 வீத மக்களுக்கு மட்டுமே எம்.பி.பி.எஸ்: டாக்டரின் சேவை

வடக்கு கிழக்குப் பகுதியில் உள்ள 15 சதவீதமான மக்களுக்கே எம். பி. பி. எஸ். வைத்தியர்களின் சேவை கிடைப்பதாக ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது' 85 சத வீதமான மக்களுக்கு உதவி வைத்திய அதிகாரிகளினதும், பதிவு வைத்திய அதிகாரிகளினதும் சேவை கிடைத்து வருகின்றதென மேலும் தெரிய வந்துள்ளது எம். பி.பி எஸ். வைத்தியர்களின் வெளிநாட்டு மோகமே இதற்கு முக்கியகாரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. மருத்துவப் பேராசிரியர்
2. உடலமைப்பியல் பேராசிரியர்
3. மன நோயியல் பேராசிரியர்
4. அங்கக் கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத்தவிசு
5. கழலையியலில் அறக்கொடைத்தவிசு
6. நோயியல் /ஒட்டுண்ணியியல் / நுண்ணுயிரியல் / உடற்றொழிலியல / மகப்பேற்றியலும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம் / சமூக மருத்துவம் / சட்ட மருத்துவம் / மருந்தியல் - விரிவுரையாளர் / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11
7. உடற்றொழிலியலில் உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர்
8. உடலமைப்பியலில் / அறுவை மருத்துவத்தில் தற்காலிக விரிவுரையாளர்

சம்பள அளவுத்திட்டம்

1. பேராசிரியர் தரம் 11: ரூபா 12,200 - 6 × 300 14,000/- மாதமொன்றுக்கு
2. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11: ரூபா 8,000 - 5 × 250- 9,250/- மாதமொன்றுக்கு
3. விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4,500- 10×200 - 6 500/- மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் ஒருவர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 4,500/- ரூபாவுக்கு மேலதிகமாக இரண்டு படியில் அதாவது ரூபா 4,900/- இல் வைக்கப்படுதல் வேண்டும் )
4. உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டு காலத்திற்கு.

பேராசிரியர்களுக்கும் அறக்கொடைத்தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவுதிகதி 1990 07 16 ஆகும். ஏனைய பதவிகளுக்கு 1990 . 05 . 16 ஆகும்.

விண்ணப்பங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர், அறக்கொடைத்தவிசுப் பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுய முகவரியிட்டு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட 23×10 சதம மீற்றர் அளவுடைய கடித உறையும் ஏனைய பதவிகளுக்கு சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23×10 சதமமீற்றர் அளவுடைய உறையும் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

குறிப்பு: அறக்கொடைத் தவிசு பதவிகளுக்கும் பேராசிரியர் பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990 . 04 . 11

04179


### இலங்கைவங்கி சுன்னாகம் கிளையில்

# சுயதொழில் முயற்சிக் கடன் திட்டம் அங்குரார்ப்பணம்

இலங்கை வங்கி அண்மையில் அறிமுகம் செய்த் சுயதொழில் முயற்சிக்கடன் திட்டத்தின் கீழ் பத்துப் பாற்பண்ணையாளர்களிற்கும், புதிய கிராமிய கொடுகடன் திட்டத்தின்கீழ் இருபது சிறு விவசாயிகளிற்கு உப உணவுப் பயிர்ச் செய்கைக்கும் கடன் வசதிகளை வழங்க முன் வந்துள்ளது.

இலங்கை வங்கி சுன்னாகம் கிளை- இலங்கை வங்கி யாழ் மாவட்ட முகாமையாளர் திரு க. கணேசமூர்த்தி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இத் திட்டத்தை நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் அங்குரார்ப்பணம்செய்து வைப்பார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் கண்காணிப்புடன் அப் குதியில் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டு பாதிக்கப்பட்ட பத்துக் குடும்பங்களிற்கு மீண்டும் தமது தொழிலை ஆரம்பிக்க சுயதொழில் முயற்சிக்கடன் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐயாயிரம் ரூபா வீதம் ஐம்பதினாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இடைக்காடு சனசமூக நிலையத்தின் மேற்பார்வையில் புதிய கிராமிய கொடு கடன் திட்டத்தின் கீழ் எதிர்வரும் சிறுபோக வெங்காயச் செய்கைக்குத் தலா இரண்டாயிரத்தைந்நூறு வீதம் ஐம்பதினாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இத்திட்டங்கள் பரீட்சாத்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் பலருக்கு இக்கடன் வசதிகளை வழங்கவும் இக்கிளையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றன.

## சத்தியசீலனின் இலக்கிய நூல் வெளியீட்டு விழா

கவிஞர் சத்தியசீலனின் அல்லைப்பிட்டி பதிஅருளப்பர் அம்மானை "இலக்கிய நூல் வெளியீட்டுவிழா அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

இலக்கியப் பெருவிழாவாக இதனை நடத்திட அல்லைப்பிட்டி இலக்கிய வட்டத்தினர் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு டிவகலாலா தலைமைவகிப்பார். யாழ்.ரோட்டறிக் கழகத் தலைவர் திரு. பி செல்வநாதன் பத்திரிகையாளர் திரு சி ஜி. மகாதேவா ஓய்வுபெற ஆசிரியர் எஸ். நடராஜா ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைப்பர்.

குருநகர் பங்குத்தந்தை அருட திரு பி. எம். இம்மானுவேல் ஆசியுரை நிகழ்த்துவார் யாழ் பல்கலைக்கழக பாக்ஸ்கிறிஸ்ரி அமைதி அருள் அமையத்தின் இலங்கைத் தலைவர் சுவாமி ம.ஜயசீலன் நூலை வெளியிட்டுவைப்பார்.


### சிறு விளம்பரம்

#### விற்பனைக்கு

4×3 அடி உயரமுள்ள (இரண்டு) நீளமான கடைப்பாவனைக்குரிய அலுமாரிகள் நியாயமான விலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:- பாலா சடை, 108, அரசடி றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 04181


## ஆலயத்திற்கு சிவலிங்கம்

கோண்டாவில் தில்லையம்பதி சிவகாமி அம்பாள் ஆலயத்திற்குப் புதிதாகச் சிவலிங்கம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது

இந்தியாவிலிருந்துகொண்டு வரப்பட்ட இந்தச் சிவலிங்கத்தைப்பொருத்தமானஇடத்தில் சம்பிரதாய பூர்வமாக வைப்பதற்கான நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டு வருவதாக மேற்படி ஆலய பரிபாலன சபைத்தலைவர் திரு எம். குணசிங்கம் தெரிவித்துள்ளார். (41)

## மேலதிக வருமானம்

பாரிய அளவில், அவசியமற்ற உத்தியோக தொலைபேசிகள் இனங்காணப்பட்டு, அவற்றின் இணைப்புக்கள் துண்டிக்கப் பட்டதால் அஞ்சல் தொலைத்தொடர்புகள் திணைக்களத்திற்கு 11 கோடியே 60 இலட்சரூபா மேலதிக வருமானமாகக் கிடைத்துள்ளதென கொள்கை திட்டமிடல், அமுலாக்கல் அமைச்சின் ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது. வீண் விரய ஒழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக ஒரு வருடத்திற்குள் அரசாங்க செலவினங்களில் சுமார் 45கோடி ரூபா மீதப்படுத்தப்பட்டுள்ளதெனவும் இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஆய்வு நிலையம் செயற்படும்

கடந்த காலங்களில் இலங்கை- இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள ஆய்வு நிலையம் திருத்தியமைக்கப்பட்டு எதிர்வரும் மேமாதத்திற்குள் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி நிலையத்தின் திருத்த வேலைகளுக்கென ஏழரை இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என வட- கிழக்கு மாகாண அமைச்சின் கல்வி- கலாசார விளையாட்டுத்துறை செயலாளர் ஈ. ஜே சற்குணராஜா தெரிவித்துள்ளார்.

# மாரடைப்பு, ஈரல் வீக்கம் மரணமும் தழுவலாம்

மதுபானம், போதைப் பொருள் பாவனை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அதிகரித்து விட்டன இதனால் மூன்றும் மண்டல நாடுகளில் வருங்கால சந்ததியினர் பெரிதும் பாதிக்கப்படுவர் என்று உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கை ஒன்று கூறியுள்ளது.

அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் மதுப்பழக்கம் அதிகரித்து வருகிறது. இதனால் மக்கள் பாரிய நோய்களினால் பீடிக்கப்படலாம். இருதய நோய், ஈரல், வீக்கம் போன்ற கொடிய நோய்களினால் மடியவும் கூடும் என்று இவ்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.


## திருமணம்



மணமகன்: செல்வன் நரசிம்மன் சங்கர் (M. Sc, P, D. D C. M)

மணமகள்: செல்வி இராசரத்தினம் பிரேமசுகந்தி (M. Sc.)

உடுப்பிட்டி ஊரிக்காடு திரு. பொன்னையா இராசரத்தினம் திருமதி இராசரத்தினம் அழகம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி செல்வி பிரேமசுகந்தி அவர்கட்கும், மதுரை நாராயணபுரத்தைச்சேர்ந்ததிரு நரசிம்மன் திருமதி நரசிம்மன் சீதாலட்சுமி தம்பதிகளின் புத்திரனும் யாதவ ஆண்கள் கல்லூரி விரிவுரையாளருமாகிய செல்வன் சங்கர் அவர்களுக்கும் மதுரை எஸ். என். எஸ் கல்யாண மண்டபத்தில் 22. 03 90 வியாழக்கிழமை பகல் 10 மணிக்கும் 12 மணிக்குமிடையே உள்ள சுபமுகூர்த்தத்தில் திருவருள் நலத்தினால் திருமணம் இனிதே நிறைவெய்தியது.

இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் அறிஞர் பெருமக்களும் ஆன்றோர் பலரும் விழாவிற்கு சமூகந் தந்து சிறப்பித்து தம்பதிகளை வாழ்த்தியருளினர்

04177



## அன்னை பூபதிக்கு கண்ணீர் அஞ்சலி

விடுதலை வேண்டுமென்ற புலிகளோ காட்டினிலே நாட்டைக் கெடுக்க என்ற நரிகளோ நாட்டினிலே மத்தியஸ்தம் வகிக்க வந்த இந்தியக் கூலிப்படையோ தாங்கள் சிங்கங்கள் என்ற திமிர் வெறியிலே தமிழ் ஈழ மக்களென்னும் முயல் குட்டிகளோ உயிரையும் மறந்த நிலையில் இது நீர் உண்ணாமல் கவலை கொண்டு இருந்து உயிர் பிரிந்த நேரம்

தற்போதைய நிலையில்

வீரங்கொண்ட வேங்கைகளோ ஊரினிலே தந்திரம் செய்த நரியினமோ புதரினிலே ஆணவங் கொண்ட இந்தியச் சிங்கமோ அந்தமானிலே! அந்தரித்த தமிழீழ மக்களோ சுதந்திரம் என்னும் ஆனந்தக் கடலினிலே!

இவை நடப்பதைக் காணக் கொடுத்து வைக்காதவராய் ஈழத்தை விட்டு இறைவனடி சேர்ந்தாய் அம்மா!

லூர்துமேரி கிராமியகடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பின பொதுமக்கள் நிர்வாகிகள்
மாதகல்

04182

## அன்னை பூபதியின் தியாக சாதனை

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தைப் பிரித்து தனி நாடாக்க வேண்டுமெனக் கோரி 1953 ஆம் ஆண்டு பொட்டி ஸ்ரீ ராமுலு உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

அப்போது இந்தியாவின் பிரதமராக விருந்த நேரு அதனைப் பொருட்படுத்தவில்லை.

ஸ்ரீராமுலுவின் ஆவி 58-ம் நாள் பிரிந்தது.

இதேபோல் சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பட வேண்டுமெனக் கோரி சங்கரலிங்க நாடார் உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

அதனையும் நேரு அசட்டை செய்ததால் 78-ம் நாள் அவர் உயிர் துறந்தார்.

1987-ல் இலங்கையில் இந்தியப்படைகள் காலடி வைத்ததும் திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாநோன்பிருந்தார்.

நேருவின் பேரன் ராஜீவ் காந்தி அசட்டையாகவிருந்ததால திலீபன் பன்னிரண்டு நாட்களின் பின் உயிர் துறந்தார்.

அன்னை பூபதி இரு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1988 மார்ச் 19-ம் திகதி உண்ணாவிரதத்தை மேற்கொண்டார்.

ராஜீவ் காந்தி இதிலும் பாராமுகமாக விருந்ததால் 31-ம் நாள் அன்னை பூபதி தியாக மரணமெய்தினார்.

வரலாற்றில் மேலும் சில தியாக வீரர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு உயிர் நீத்துள்ளனர்.

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக அயர்லாந்து போராட்டவீரர்கள் நடத்திய உண்ணாவிரதத்தில் அயர்லாந்து வீரர் எரைன்ஸ் மாக்ஸ்வினி இருநூறுவது நாளில் உயிர்துறந்தார்.

இதே சமயம் சிறைக் கொடுமைகளை எதிர்த்து அயர்லாந்து நாடாளுமன்ற உறுப்பினர் பொபி சாண்டஸ் ஆரம்பித்து வைத்த சிறை உண்ணாவிரதத்தில் அவருடன் பத்துப்பேர் உயிர்துறந்தனர்.

இதேபோல் பிரிட்டிஷாரின் சிறைக் கொடுமைகளை எதிர்த்து ஜிதேந்திரநாத் என்ற இந்தியதேச பக்தர் சிறையில் உண்ணாவிரதமிருந்து 63 நாட்களில் உயிர் துறந்தார்.

மற்றைய உண்ணாவிரதங்களைவிட இந்தவகை சிறை உண்ணாவிரதங்கள் வித்தியாசமானவை.

இவை எதிராளிகளின் மத்தியில் எதுவித ஆதரவும் இல்லாத நிலையில், எதிர்ப்புகள் மத்தியில் தனி மனிதனாக நின்று சாதித்த சாதனைத் தியாகமாகும்.

எதிரிகளின் நடுவே இருந்துகொண்டு அவர்கள் சாதித்த அந்தத் தியாகத்திற்கு ஈடானது தான் அன்னை பூபதியின் தியாகமும்.

தொடர்பு சாதனங்கள் யாவும் இந்திய அரசைப் புகழ் பாடிக் கொண்டு உண்ணாவிரதத்திற்கு எதிரான கோஷங்களை முன் வைக்கையில்,

உண்ணாவிரதத்தை ஆதரித்தோர் கைது செய்யப்பட்டுக் கொண்டிருக்கையில்,

தனி ஒருவராக, ஒரு பெண் இத் தியாக சாதனை புரிந்துள்ளார்.

இவர் ஒன்றும் பெயர்பெற்ற அரசியல் வாதியோ, பெண் போராளியோ அல்ல, ஓர் கிராமத்து சாதாரண தாய்

தனது இரு ஆண்பிள்ளைகளையும் இராணுவத்திடம் பலி கொடுத்தவர்.

ஆனால், மற்றைய தாயார்களைப்போல வாளாவிருக்கவோ, வெறுமனே ஒப்பாரி வைக்கவோ இல்லை.

மனத்துணிவுடன் தனது இறுதி மூச்சு வரைப் போராடியவர்.

இவரது அன்றைய இரு அம்சக் கோரிக்கைகளும் இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு இந்தியப்படையும் போய்விட்டது.

ஆனால் அன்னை பூபதியின் தியாகமும், வீர உணர்வும் உலக மக்கள் மனதில் நிலைக்கும்.

## இதயநாதம்

வியாழக்கிழமை 19-04-1990

### நல்வாக்கு

சமத்துவத்தைக் காண்பதற்குச் சுதந்திரம் ஒரு சாதனம். அப்படி இல்லையென்றால் அந்தச் சுதந்திரத்திற்குப் பொருளே இல்லை.

-மாஜினி

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

---

# அன்னை பூபதி ஒரு போராளியல்ல

# பெரும் அரசியல் வாதியுமல்ல

# ஒரு பின்தங்கிய கிராமத்தின்

# சாதாரண குடும்பப் பெண்

> ஒரு நாட்டின் மக்கள் தொகையில் அரைப்பங்கினர் அடுப்பங் கரையில் இருக்கும் வரை புரட்சி என்பது சாத்தியமில்லை.
>
> மா. ஓ. சேதுங்

கடந்த இரண்டரை ஆண்டுக்கு முன்னர்... அபயம் அளிப்போம் எனக்கூறிக் கொண்டு தமிழீழத்தில் காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாக தனது சுயரூபத்தை வெளிக்காட்டியநேரம்...

தமிழினத்தை பூண்டோடு அழிப்பதற்கு இந்திய இராணுவம் கங்கணம் கட்டிக்கொண்டிருந்த நேரம்...



அந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் ஆயுதப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருந்த அதே வேளையில் தமிழீழ மக்கள் அகிம்சைப் போராட்டத்தைத் முன்னெடுத்து சென்றனர்.

தமிழீழ மக்களின் ஆயுத அகிம்சைப் போராட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாத இந்திய அரசு தமிழீழ மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தியது.

இந்தியப்படை ஆயுதகளைவு என்ற போர்வையில் தமிழ் இனத்தை அழிக்கும் வேளையில் மிக மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் முரசொலி, ஈழமுரசு பத்திரிகைக் காரியாலயங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள், கொடுமைகள், அழிவுகளை எதிர்த்து தமிழீழத்தில் மக்கள் கொதித்தெழுந்தனர்.

மட்டக்களப்பு அன்னையர் முன்னணியினர் 1988-ம் ஆண்டு மார்ச் 13 ந் திகதி மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஒரு வாரகால சுழற்சி முறை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

இந்திய இராணுவத்தினர் அடக்குமுறைகள், இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆரம்பிக்கப்பட்ட சுழற்சி முறை உண்ணாவிரதத்தை இந்திய அரசு மதிக்காது எள்ளி நகையாடியது.

இந்தியப் படையினரின் அட்டகாசம், அட்டூழியம், படுகொலைகள் தொடர்ந்தன. வீதிகளில் செல்லும் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாகக் கைது செய்யப்பட்டு, கண்கள் கட்டப்பட்டு முகாம்களுக்கு இழுத்து செல்லப்பட்டனர்.

ஆனால் அவர்களில் பெரும்பாலான இளைஞர்கள் வீடு திரும்பவே இல்லை. இளம் பெண்கள் வீதிகளில் செல்ல அஞ்சினர். சோதனை என்ற பெயரில் நடக்கும் இம்சைகளை கொடுமைகளை எதிர்கொள்ள முடியாது பூட்டிய அறைகளுக்குள் முடங்கி கிடந்தனர். பள்ளிச்சிறுவர்கள் பாடசாலை செல்லத் தயங்கினர்.

படையினரின் அட்டூழியம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த வேளையில் 1988 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆந் திகதி இந்திய ஆக்கிரமிப்பு படையின் இந்திய அதிகாரிகளின் செயலைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது.

இந்தியப் படையினர் சாத்வீகப் போராட்டங்களுக்கு தடைவிதித்தனர். ஊர்வலம், ஹர்த்தால், பொதுக் கூட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டது.

ஆனால் இந்திய இராணுவத்தின் தடைகளையும் மீறி 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19-ம் திகதி மட்டு. மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை தனது உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

**இரா. துரைரத்தினம்**

✶ இந்திய இராணுவம் நிபந்தனையற்ற யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

★ இந்திய அரசு விடுதலைப் புலிகளை அழைத்து பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும். நியாயபூர்வமான இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து தனது போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி கணபதிப்பிள்ளை தனது இலட்சியம், கோரிக்கை நிறைவேறும்வரை உண்ணாவிரதம் இருப்பேன் என உறுதியோடு தனது போராட்டத்தை முன்னெடுத்து சென்றார்.

அன்னை பூபதி ஒரு விடுதலைப் போராளி அல்ல...... அரசியல் வாதியுமல்ல. மிகவும் பின்தங்கிய ஒரு கிராமத்தில் பிறந்து வளர்ந்த சாதாரண குடும்பப் பெண்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பற்றுமிக்க கிரான் என்னும் கிராமத்தில் 1931 ஆண்டு ஜனவரி மாதம் 10ந் திகதி அன்னை பூபதி பிறந்தார்.

தனது 17ஆவது வயதில் புகையிரத திணைக்கள ஊழியரான கணபதிப்பிள்ளை என்பவரை மணந்து கருவேப்பங்கேணி என்னும் கிராமத்தில் வசித்து வந்தார்.

இரண்டு ஆண்பிள்ளைகளையும். இரண்டு பெண்பிள்ளைகளையும் பெற்றெடுத்த அன்னை பூபதி தமிழ் பற்றுமிக்க பெண்ணாக வாழ்ந்தார்.

ஆனால் அன்னை பூபதியின் இரண்டு ஆண்பிள்ளைகளும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இராணுவ கொடுமைகளுக்கு தமது ஆண்பிள்ளைகள் இருவரையும் பலிகொடுத்த அன்னை பூபதி தமது வேதனைகளை, விம்மல்களை அடக்கிக் கொண்டு நான்கு சுவர்களுக்குள் முடங்கிக் கிடக்கவில்லை.

தன்னைப் போன்ற தமிழ்த் தாய்மார்களின் கண்ணீருக்கு ஒரு விடிவு பிறக்க வேண்டும் எனத்துடித்தார்.

தமிழ்த் தாய்குலத்தின் கண்ணீரை துடைக்க தன் உயிரையும் கொடுக்க தயாரானார்.

அகிம்சைப்போராட்டத்தின் மூலம் விடுதலை பெற்றதாக தம்மை பிரகடனப்படுத்திக் கொள்ளும் இந்திய அரசு தமிழீழத்தில் நடைபெறும் அகிம்சை போராட்டத்தை மதிக்கத்தவறியது. அகிம்சை போராட்டத்தை துப்பாக்கி முனையில் அடக்க இந்திய இராணுவம் முற்பட்டது.

ஆனாலும் அன்னை பூபதி இந்திய இராணுவத்தின் துப்பாக்கி முனைப் பயமுறுத்தல்களுக்கு அடிபணிந்து போகவில்லை.

போராட்டம் தொடர்ந்தது. தனது இரு கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டுத் தமிழீழத்தில் இரத்த ஆறு ஓடுவதைத் தடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார் அன்னை பூபதி.

1988ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ந் திகதி தன் இனத்தின் விடியலுக்காய் அந்த தீபம் தன்னை அணைத்துக் கொண்டது.

ஆம்... அன்னை பூபதி இந்த மண்ணின் விடிவுக்காக... தன் வாழ்வை அணைத்துக் கொண்டார்.

அகிம்சையை மதிக்கத் தெரியாத இந்தியா தமிழீழத்தின் அன்னையை அணு அணுவாகக் கொன்றுவிட்டது.

தமிழீழமே கலங்கி நின்றது. அன்னையின் தியாக மரணத்தை இந்திய அரசு கேலி செய்தது. அன்னை பூபதியின் இறுதி ஊர்வலத்திற்குச் சென்ற பொதுமக்கள் இந்திய இராணுவத்தாலும், அவர்களின் அடிவருடிகளாலும் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டனர்.

ஆனாலும் அன்னை பூபதியின் இறுதி ஊர்வலத்தில் மக்கள் வெள்ளம் அலை மோதியது.

இந்தியா அன்று அன்னை பூபதியின் கோரிக்கைகளை நிறைவேற்றியிருந்தால் அதன் பின் ஏற்பட்ட உயிர் அழிவுகளையாவது தடுத்திருக்கலாம்.

"ஒரு தேசத்தில் பெண்கள் தான் முதுகெலும்பு போன்றவர்கள் சோர்வடைந்த மக்களுக்குத் தேச அபிமானத்தையும், ஆவேசத்தையும் உண்டு பண்ணும் சக்தி பெண்களுக்குத் தான் உண்டு." என நேதாஜி கூறியது போல அன்னை பூபதி சோர்வடைந்திருந்த மக்களைத் தட்டி எழுப்பினார். விடுதலைப் போராளிகளுக்கும், மக்களுக்கும் ஒரு உந்து சக்தியானார்.

அன்னை பூபதியின் போராட்ட வரலாறு எமது தாயக விடுதலைப் போராட்டத்தில் நாம் என்ன செய்ய முடியும் என அடுப்பங்கரைப் பக்கம் இன்னமும் இருக்கும் தாய்க் குலத்தைத் தட்டி எழுப்பட்டும்.

தமிழீழப் போராட்டத்தில் ஒரு புறநானூறு படைக்கட்டும்.

அதுவே அன்னை பூபதிக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

# கிழக்குச் செய்திகள்

## வீண்விரயம் தவிர்க்கப்படும்

''போக்குவரத்துறையில் நிலவும் குறைபாடுகளை ஆராய்ந்து வீண்விரயம் தடுக்கப்பட்டு மக்களுக்கு வசதியாகவும் நாட்டு அபிவிருந்திக்கு ஏற்புடையதாகவும் போக்குவரத்துச் சேவையை மாற்றியமைக்க சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்''

இவ்வாறு போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் அல்ஹஜ் யு. லெ. எம். பாருக் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

'எம்பிகளும், அமைச்சர்களும் மக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்' என்றும் அவர் வற்புறுத்தினார்.

## வன்செயல் நட்டஈடு

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற வன்செயல்களின்போது உயிர் இழந்தோருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தால் வழங்கப்பட்டு வருகின்றன.

இக்கொடுப்பனவுகள் காசோலை மூலம் உயிரிழந்தவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

மூன்று கட்டங்களாக வகுக்கப்பட்டு செயல் திட்டம் அமுலாகிறது.

## 'நிரந்தர நியமனம் தேவை'

வாழைச்சேனைப் பகுதியில் மலேரியாத்தடை இயக்த்தில் வேலை செய்யும் சமயா சமய ஊழியர்களை நிரந்தரமாக்குமாறு வந்தாறுமூலை இளம் சைவ மன்றம் சுகாதார அமைச்சைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இப்பிரிவில் கடந்த பத்து வருடங்களாக வேலை செய்யும் மலேரியா தடை இயக்க ஊழியர்கள் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று இம்மகஜரில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

## பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு

மட்டக்களப்பு படுவான் கரைப்பகுதியில் உள்ள காத்தான்குடி முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களை பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அறிக்கைமூலம் கேடடுள்ளது. காத்தான் குடி இஸ்லாம் மக்களை சுபீட்சமும், சமாதானமும் அபிவிருத்தியும், மகிழ்ச்சியும், மிக்க உலகிற்கு அழைத்துச் செல்லத்தாம் விரும்புவதாகவும், அதனால் அவர்களுக்குச் சொந்தமான பெரும் விவசாயக் காணிகள் படுவான் கரைப்பகுதியில உரிமையற்றவர்களால் செய்கை பண்ணப் படுவதால் அந்தநிலங்களுக்கு உரிமையான காத்தான்குடி மக்களே அங்கு செய்கை பண்ண வேண்டும் என்பது தமது விருப்பம் என்று அந்த அறிக்கையில் விடுதலைப்புலிகள் முன்னணி குறிப்பிட்டுள்ளது அறிக்கை காத்தான் குடியில் உள்ள பள்ளி வாசல்கள் மூலமாக மக்களுக்கு ஒலிபரப்பப்பட்டது.

## இன்று திருமலை விஜயம்

திருகோணமலை துறைமுக அபிவிருத்திபற்றி ஆலோசனைகளை மேற்கொள்ளும் பொருட்டு துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் ரூபா கருணதிலகா ராஜாங்க அமைச்சர் மஹ்ரூப் ஆகியோர் இன்று திருகோணமலைக்கு வரவுள்ளனர். பிற்பகல் 2 மணிக்கு இதுதொடர்பான கூட்டம் ஒன்றும் நடைபெறவுள்ளது.


## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி



உண்ணா விரதம்
19. 3. 88

தியாக மரணம்
19. 4. 88

ஈழமண்ணின் சரித்திரத்திலே
என்றும் நிலைக்கும் பூபதி நாமம்
வாழும் நாளில் உமது நாமம்
வாழ்த்தி வாழ்த்தி மகிழ்வார் தமிழர்

மெழுகுவர்த்திபோலே உருகி
மேன்மை பெற்றீர் தமிழ்க் காவியந்தன்னில்
பழுதில்லாத நோன்பு நோற்று
பட்டினியிருந்தே ஈழம் காத்தீர்

நாயகம் ஸ்ரோர்ஸ்

3 கண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

04183


### மொட்டைக் கடிதம், தொலைபேசியில் மர்மக் குரல்;

# மிகப் பெரும் டீசல் மோசடி மந்திரி 'விஜே'யால் அம்பலம்!

ரயில்வேப் பகுதியில் மிகப் பெரும் டீசல் மோசடி ஒன்று போக்குவரத்து அமைச்சர் திரு. விஜயபால மென்டிசினல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

நாட்டின் பஸ்-ரயில் போக்குவரத்துச் சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு பல முனைகளில் நடவடிக்கை மேற்கொண்டுவரும் அமைச்சர் கடந்த திங்களன்று புகையிரதப் பகுதியில் எரிபொருள் விநியோகப் பிரிவில் நீண்ட காலமாக நடந்துவந்ததாகக் கூறப்படும் இம்மோசடியைப் பகிரங்கப் படுத்தியுள்ளார்.

இதன் எதிரொலியாக மாளிகாவத்தையிலுள்ள புகையிரதப் பகுதியில டீசல் மடுவத்தில் கடமைபுரியும் நான்கு புகையிரதப்பகுதி ஊழியர்கள தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அமைச்சர் இம் மோசடியைக் கண்டுபிடிக்க உதவியது. அவரது அலுவலகத்திற்கு வந்த ஒரு மொட்டைக் கடிதம் தான் என்று தெரிவிக்கப் படுகிறது. அலுவலகத்தில் இக் கடிதத்தை வாசித்துக்கொண்டிருக்கையில் தொலைபேசி அழைப்பும் அமைச்சருக்கு வந்தது பெயரைக் குறிப்பிடாமல் மொட்டைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட அதே தகவல்களை அந்த மர்மக் குரலும் கொடுத்தது

பொலிஸாரின் உதவியுடன் துரிதகதியில் செயற்பட்ட அமைச்சர் குறிப்பிட்ட இடத்திற்கு விரைந்தபோது 10ஆயிரம் கலன் டீசல் டாங்கி ஒன்று சீல் வைத்தபடி இருந்தது. பதிவேட்டைப் பார்த்தபோது 10 ஆயிரம் கலன் டீசல் டாங்கிக்குள் நிரப்பப் பட்டிருப்பதாக பதிவேடு காட்டியது. ஆனால் உண்மையில் டாங்கிக்குள் 5100 கலன்டீசல் மட்டும் இருந்தது.

## 'இறைவனின்றி மனிதனில்லை' வாழ்த்தில் பாப்பரசர்

''இறைவன் இன்றி மனிதன் வாழ முடியாது என்பதை உலகம் புரிந்து கொண்டு வருகிறது என்பதையே பல வருட காலமான போராட்டங்கள் கடவுள் இல்லை தத்துவங்கள், சர்வாதிகாரங்கள் ஆகியவற்றின் பின்னராக ஜனநாயக எழுச்சி உணர்த்துகிறது'' என்று பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் உலகிற்கான தனது ஈஸ்டர் தினச் செய்தியில் குறிப்பிட்டார். வத்திக்கானில் சென் பீற்றஸ் சதுக்கத்தில் சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் முன்னிலையில் தனது ஈஸ்டர் செய்தியை பாப்பரசர் விடுத்தார். ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளில் இச்செய்தி நேரடி அஞ்சல் செய்யப்பட்டது தமிழ், ரஷ்ய, ரோமானிய ஹேபுறு, சுவாஹிலி உட்பட உலகின் 55 பண்டைய மொழிகளில் தனது ஈஸ்டர் வாழ்த்துக்களை பாப்பரசர் தெரிவித்தார்.

## தமிழ்த் தின விழா போட்டி

பாஷையூர்புனித அந்தோனியார் றோமன் கத்தோலிக்கமகளிர்வித்தியாலயம் யாழ். தெற்குக் கொத்தணிப் பாடசாலைகளின் தமிழ்தினவிழாப்போட்டிகளில் கூடுதல் ஸ்தானங்களைப் பெற்றுச் சாதனை புரிந்துள்ளது.

இவ்வித்தியாலய மாணவிகள் முதலாம் பிரிவு வாசிப்பில் முதலிடமும், மூன்றும் பிரிவு கவிதைப் போட்டியில் முதலாமிடமும், மூன்றும் பிரிவு நடனப்போட்டியில் முதலாமிடமும் பாஓதல் தனி இரண்டாப் பிரிவும் போட்டியில் இரண்டாமிடமும், மூன்றும் பிரிவு பாஓதல் குழுப் போட்டியில் மூனறுமிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (36)

## தமிழ் கணக்குப் பதிவாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

உள்ளூராட்சிச் சேவையைச் சேர்ந்த தமிழ்க் கணக்குப் பதிவாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் யாழ்மாநகராட்சி மன்றத்தின் கணக்குப் பகுதியில் நடைபெற்றது தொழிற்சங்கத்தின் முக்கியத்துவம் பற்றியும், அதன் தேவைகள் பற்றியும, கடந்தகாலங்களில் அரசியல் இலாபம் பெற முயற்சித்தவர்களின் தலையீடுகள் காரணமாகச் சின்னபின்னப் படுத்தப் பட்ட தொழிலாளர் வர்க்கம் உரிமைகளை வென்றெடுப்பதில் ஆற்றவேண்டிய பங்களிப்புக்கள் பற்றியும் பலரும் கருத்துத் தெரிவித்தார்கள்.

நடப்பாண்டுக்குரிய ஆட்சிக் குழு உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: பி.சின்னத்துரை, உபதலைவர்: கே கௌஸ்துப மணி, செயலாளர்: ஆர். கே இராஜேஸ்வரன், உப செயலாளர்: வீ. எம். சுப்பிரமணியம், பொருளாளர்: கே, பலராமன்

யாழ். மாநகர சபையின் கணக்காளர் க. தனரஞ்சிதராஜன் அவர்கள் இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்

## அங்குரார்ப்பணக் கூட்டம்

வெளிவாரிப் பட்டதாரிகள் ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை காலை 9 00 மணிக்கு ஸ்ரான்லி வீதி பொண்ட் கல்வி நிறுவனத்தில் நடைபெறும் சகல வெளிவாரி பட்டதாரிகளும் கலந்து கொள்ளுமாறு வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத் தலைவர் என். விஜயன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## பல்துறை போட்டிகள்

கடந்தவருடம் நடாத்தியது போல இவ்வருடமும், யாழ்-மாநகர சனசமூக நிலையங்களின் சமாசம், யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கிடையேயும், மக்களிடையேயும் கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி சிறுகதைப் போட்டி, ஓவியப் போட்டி, இசை நாடகப் போட்டி நுண்ணறிவுப் போட்டி முதலிய போட்டிகளை நடாத்துவது என்று தீர்மானித்துள்ளது.

கட்டுரைப் போட்டிக்கு ஆண்டுஎட்டுக்குட்பட்ட மாணவர்களும், ஆண்டு எட்டுக்கு மேற்பட்டவர்களுமாக இரு பிரிவுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. இப்போட்டியின் விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31-ம் திகதியாகும் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

கவிதைப் போட்டி, சிறுகதைப் போட்டி ஓவியப் போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி 30 ஆகும் ஓவியப் போட்டியும் இரண்டு பிரிவுப்போட்டிகளாக நடத்தப்படவுள்ளன.

## நூல் வெளியீட்டு விழா

ஆத்மஜோதித் தத்துவ ஞான நூலாசிரியர்- திரு. த. சத்தியதாஸன் அவர்கள் எழுதிய பிரமோதூத வருஷபலன்களும், ஸ்ரீ ரமண பகவான் அருளிய நான்- ஆத்மா தத்துவ ஞான விளக்கமும் அடங்கிய நூல் வெளியீட்டு விழா, கீரிமலை- யோக சுவாமிகள் மகளிர் தவநிலையத்தில் முன்னாள் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு. வ. செல்லையா தலைமையில் நடைபெற்றது. அன்றைய தினம் பூஜைகளும். ஆராதனைகளும் இடம் பெற்றன.


Niru Tuition Centre
KONDAVIL

A/L 90
இரசாயனவியல் -திரு. செல்வா
வினாவிடை வகுப்புக்கள்
சனி ) ஞாயிறு ) 7.15 — 8.15 ஆரம்பமாகின்றன

A/L 91 அசேதன இரசாயனம்
சனி ) ஞாயிறு ) 3.30—4.30 21.4.90 இல் ஆரம்பமாகிறது

A/L 91
பௌதிகவியல் திரு. கணேசன்
வெப்பவியல்
சனி ) ஞாயிறு ) 2.30 — 3,30 21 4.90 இல் ஆரம்பமாகிறது

04167

புதுவருட இலங்கை வங்கி கிளை நிகழ்ச்சியில் உரை

# பணம் வாழ்விற்கு அவசியம் அதனை அறம் செய்யவேண்டும்

பணம் வாழ்விற்கு அவசியம் தேவை. ஆனால் அப்பணத்தைக் கொண்டு வாழும் மனிதன் அப்பணத்தை பயன்படுத்தி அறம் செய்ய வேண்டும். இந்த அறமே அவனை வாழ்விக்கும். அவனுடன் கூட வருவதும் இந்த அறம் எனப்படும் தர்மமே!

இவ்வாறு யாழ் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் யாழ் இரண்டாம் கிளை நடத்திய புதுவருட நிகழ்சியின் போது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட விரிவுரையாளர் திரு கனகசபாபதிநகேஸ்வரன் தனது உரையின் போது குறிப்பிட்டுப் பேசினார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

வருடப்பிறப்பில் வங்கியாளர்கள் கைவிசேடம் கொடுக்கும் பணியில் வங்கியாளர்கள் பங்கு கொண்டு, சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் முறை பாராட்டத் தக்கது வரவேற்கப்பட வேண்டியது. இவ்வகையில் தனம் என்னும் செல்வம் பணமாகப் பரிவர்த்தனை பண்ணப்பட்டு வாழ்வுக்கு வேண்டிய வழங்களை சேர்ப்பிக்கின்றது. பணம் தருமமாக பயன்படுமானால் அது இரட்டிப்பு மடங்கு அதிகரிக்கும் 'இதனையே இறைக்கின்ற கிணறு ஊறும்' எனப் பழமொழி உணர்த்துகின்றது என்றும் சுப நேரத்தில் வாடிக்கையாளர்களும், வங்கி அதிகாரிகளும், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட திரு கனகசபாபதி, நாகேஸ்வரனும் (யாழ் ப. க க விரிவுரையாளர்) மங்கள விளக் கேற்றி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர்,

பெரும் திரளாகக் குழிமியிருந்த வாடிக்கையாளர்களுக்கு வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் திரு பி கே வின்னஸ், செயற்பாட்டு முகாமையாளர் திரு மு கனகரத்தினம் மாவட்ட முகாமையாளர் திருவாளர்கள் க கணேஷமூர்த்தி ந சிவன், கிளை முகாமையாளர் திரு செல்லப்பா சம்பந்தநாதன் ஆகியோரால் கைவிசேஷம் வழங்கப் பட்டதோடு உதவிப் பொது முகாமையாளரால் சிறப்பு விருந்தும் வழங்கப் பட்டது,

## விற்கத் தடை

பாவனைக்குதவாத 5000 தொன் பழுப்பு நிற சீனியைத் தனியார் துறையினர் இறக்குமதி செய்துள்ளது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இச்சீனி பாவனையாளர்களிடையே விநியோகிக்கப்படுவதை உடன் இடைநிறுத்து மாறு உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி உள்ளூர் வர்த்தக ஆணையாளரைப் பணித்துள்ளார்

## மக்கள் சக்தி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக, வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து. தனது சமூகத்தின் சுபிட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது, உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்கு முறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலை குனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

அதனால்தான் இன்றைய தினத்தை, அன்னை பூபதியின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை, தேசிய எழுச்சி நாளாக. இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணிலிருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாகக் கொண்டாடுகிறோம்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு. எத்தனையோ திருப்புமுனைகளை முகம் கொடுத்து, வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும்பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால் மிகவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப்பெரிய சவாலாக அமைந்தது. முதன் முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையை சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப் பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான யுத்தம் ஏவிவிடப்பட்டபோது எமக்காக குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை, உலக வல்லரசுகளும் மூன்றும் உலக நாடுகளும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தன தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்கு துணை போயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப்பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணைய விடாது போராடினோம்.

இறுதியில் நாம் வெற்றி கண்டோம்.

இந்த வெற்றிக்கு காரணம் எமது மனம்தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

இந்த வெற்றியானது தமிழீழ மக்களாகிய உங்களது வெற்றி. உங்கள் குழந்தைகளாகிய எமது போராளிகளின் வெற்றி உங்கள் இயக்கமாகிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி.

இந்தியவல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றிகொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத் திருப்பத்தில் நின்றுகொண்டிருக்கிறது மலைபோல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும்வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சிகொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கிவிட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில் இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி, அவர்களுக்கு எமது வீர அஞ்சலியைச் செலுத்துவோமாக.

இவ்வாறு திரு. பிரபாகரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சண்டை

பொலிஸ்காரரைக் கைது செய்யச் சென்ற போது இராணுவத்தாருடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் பொலிஸ்காரரின் தந்தை காயமுற்றார். இச்சம்பவம் நிக்காவொடை பம்பரப்பாவையில் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் வருவார்?

இளைஞர்விவாகர, விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. நந்தா மத்தியூவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றப் பணிப்பாளர் திரு குமாரகேயும்வெகுவிரைவில் யாழ் விஜயம் ஒன்றினை மேற்கொள்ள விருப்பதாக அறியவருகிறது.

## கீரிமலை- மாசியப்பிட்டி

கீரிமலையிலும் அன்னை பூபதி நினைவஞ்சலியும் மக்கள் முன்னணியின் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

மாசியப் பிட்டியில் அன்னை பூபதி நினைவாக உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் இடம் பெற்றன.

## நடவடிக்கை

பாவற்குளம் பாடசாலையை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இராணுவ முகாம் அகற்றப் பட்டதையடுத்து இம் முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.


# கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in

- BASIC Language
  ஆரம்பம்; 21 April 1990 11.00 a.m.
- d BASE III +
  ஆரம்பம்: 22 April 1990 11.00 a.m.
- LOTUS 1-2-3
  ஆரம்பம்: 22 April 1990 9.00 a.m,
- WORD PROCESSING
  ஆரம்பம்; 22 April 1990 2.00 a'm.

VERBATIM (2S, 2D.) Floppy Discs
எம்மிடம் விற்பனைக்குண்டு

UNIKCO COMPUTER CENTRE
No. 5, Power House Road, 2nd Lane
JAFFNA

04186



# அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி




ஈழத் தமிழ் மக்களின்...... விடிவிற்காய்
தன் உயிரை அர்ப்பணித்த அன்னையே!

ஸ்ரீ லங்கா இராணுவத்கிற்கு உனது
இரு ஆண் பிள்ளைகளைப் பலி கொடுத்தாய்!

இந்திய ஆக்கிரமிப்புப் படைக்கெதிராய்
போராடி உயிர் நீத்தாய்!

உனது தியாகம் பெறுமதி வாய்ந்தது!
தமிழீழ விடுதலைப் போராட்ட தியாக
வரலாற்றில் நீ ஓர் தனி இடம்
பெற்றுவிட்டாய்!

நிர்வாகிகள்
மயில்வாகனப் புலவர் சனசமுக நிலையம்
மாதகல்

04173



# தியாக தீபம் அன்னை பூபதி




மெழுகு வர்த்திபோல தன்னையே உண்ணா நோன்பிலிருந்து உருக்கிக் கொண்டாள் அன்னை.

அன்னை அழிந்தாள் அவள் ஏற்றிய ஒளி அணையவில்லை.

தாய்க் குலத்தின் தியாகம் இளவல்களை அணி, அணியாக இணையச் செய்து ஈழம் காணத் துணை செய்துள்ளது. வாழ்க அவள் தியாகம்.

யாழ் / முஸலிம் வட்டார
யுனிசெப் கிளை

04187

விடுதலைப்புலிகள்- அரசு பேச்சுவார்த்தை

# எத்தகைய இணக்கமாயினும் ஏற்போம் என்கிறது மக்கள் கட்சி

''விடுதலைப்புலிகள்- அரசு பேச்சுவார்த்தைக்கு நாம் தொடர்ந்து ஆதரவளிப்போம்'' என்று ஸ்ரீலங்கா மக்கள்கட்சிச் செயலாளர் திரு. வை.பி. சில்வா கூறியுள்ளார்.

''விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே நடைபெற்றுவரும் பேச்சுக்கள் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் இடம்பெறவேண்டுமெனவும் அதன் வெற்றிக்கு எமது ஆதரவு தொடர்ந்து உண்டு'' என்றும் அவர் சொன்னர்.

''இப்பேச்சுக்களில் காணப்படும் இணக்கம் எத்தகையதாக இருப்பினும் எமதுகட்சி அதனை ஏற்றுக்கொள்ளும். விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தைக்கு முன்னேடி காலஞ்சென்ற எமது தலைவர் விஜயகுமாரணதுங்கா வாவர். நெருக்கடியான காலகட்டத்தில் யாழ்ப்பாணம் சென்று புலிகள் முக்கியஸ்தர்களைச் சந்தித்து வடக்குக்கும், தெற்குக்கும் பாலம் அமைத்தவர் அவர் அவர் கண்ட கனவு இன்று நனவாகிக்கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு இலங்கைக்கு ஏற்படவேண்டும் என்ற அவரின் எண்ணங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன.

பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் பற்றி எமக்குத் தெரியாது ஆனல் இணக்கத் தீர்வு ஏற்பட்டால் எமது கட்சி ஆதரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## சம முக்கியத்துவம் செயலாளர் உறுதி

இரண்டாம் தவணை முதல் 25 வீத தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழியும் 75 வீத சிங்களப் பாடசாலைகளில் தமிழ் மொழியும் போதிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு சிங்கள மொழிகள் கற்பிக்கக்கூடிய தமிழ் ஆசிரியர்களை தெரிவு செய்ய வேண்டும் என, கல்வி அமைச்சின் செயலாளர் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்திடம், கோரிக்கை ஒன்றினை விடுத்துள்ளனர்

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சங்கத் தூதுக்குழுவினர் இந்தத் திட்டம் தமிழ் மொழிப் பாடசாலைகளில் மாத்திரம் சிங்கள மொழியை கற்பிப்பதாகவும், சிங்கள மொழிப் பாடசாலைகளில் எதுவும் நடைபெறமல் இருக்கக் கூடியதாக அமைந்தால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என செயலாளரிடம் தெரிவித்தனர். படிப்படியாக சம முக்கியத்துவம் கொடுத்து சகல பாடசாலைகளிலும் இரு மொழிகளையும் கற்பிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதாக மேலும் செயலாளர் தெரிவித்தார்.

### விடுதலைப்புலிகள்........

ஒடுக்கப்பட்ட மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களே இன்றைய உலக வரலாற்றின் போக்கை நிர்ணயிக்கின்ற முக்கிய சக்தியாக விளங்குகின்றன.

மனித குலத்தின் சுதந்திர வேட்கையை வெளிப்படுத்தும் இத்தகைய விடுதலைப் போராட்டங்கள் முற்போக்கானவை, புரட்சிகரமானவை

உலகில் நடைபெறுகின்ற எந்தவொரு விடுதலைப் போராட்டமும் தமக்கேயுரிய யதார்த்த புறநிலைகளையும், தனித்தன்மைகளையும் கொண்டிருக்கின்றன.

இந்த வகையில்... எமது பிரதேசத்திற்கேயுரிய தனித்தன்மையுடன், தமிழ்த் தேசிய இனத்தின் இறைமையைப் பாதுகாப்பதற்காக நடைபெறும் எமது சுயநிர்ணய உரிமைப் போராட்டமானது நீண்ட பரிணும வரலாற்றைக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் சாத்வீக வழியிலும். எதிரியின் ஆயுத வன்முறையின் முன்பு அகிம்சைப் போராட்டம் தோற்றுப்போக ஆயுதப் போராட்டமாக முதிர்ச்சி பெற்ற வடிவிலும் முன்னெடுக்கப்பட்ட எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் சிறிது காலத்திற்கு முன்புவரை கூட பெண்களின் பங்களிப்பு மிகச் சொற்பளவாகவே இருந்துவந்தது.

ஆனல், காலப்போக்கில் இன ஒடுக்குமுறை கூர்மையடைந்து தமிழர்களுக்கெதிரான இழப்புகள் அதிகரிக்க, அதிகரிக்கச் சமூகத்தளைகளுள் கட்டுண்டிருந்த பெண்களும் அத்தளைகளை உடைத்து வெளியே வந்து எமது தேசிய விடுதலைப் போரில் பங்குகொள்ளத் தொடங்கினர்.

இன்று... ஆயிரக்கணக்கான பெண்கள் ஆயுதம் ஏந்திக் களத்தில் இறங்கியுள்ளனர். பல்லாயிரக்கணக்கான பெண்கள் எமது தேசத்தையும், மக்களையும் விடுவிப்பதற்காகத் தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணிக்க முன் வந்துள்ளனர்.

எமது தாயகத்தின் விடிவிற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்ததன் மூலம், இவர்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக விளங்கியவர் ஐம்பத்தெட்டு வயதுடைய அன்னையர் இலகம் பூபதி கணபதிப்பிள்ளை,

தமிழ் மக்களைக் காக்க வந்தோம் என்ற போர்வையில் எமது தேசத்தினை ஆக்கிரமித்து எம் மக்களைக்கொன்று குவித்து சொத்துக்களை சூறையாடிய இந்திய ஆக்கிரமிப்பாளர்களின் கபடத்தனத்தால் இன்று எமது மண் பல்லாயிரக்கணக்கான தேச பக்தர்களை இழந்து விட்டிருக்கின்றது.

1988 ஆம் ஆண்டின் முற்பகுதியில்...

இந்தியக்கூலிப் படைகளின் கொடூரங்கள் தீவிரபபடுத்தப் பட்டிருந்த நேரம் இந்திய அரசின் ஆதரவுடன் இயங்கிய தமிழ்த்தேச விரோதக் குழுக்களின் துப்பாக்கிகள் தேச பக்தர்களுக்கு எதிராக திருப்பப்பட்டிருந்த நேரம், இந் நேரத்தில்...பாரத தேசத்தின் அதர்ம போரையும் அவர்களின் கூலிப்படைகள் எம் மக்களுக்கு இழைக்கும் கொடுமைகளையும் நிறுத்துவதற்காக இரு கோரிக்கைகளை பாரத அரசிடம் முன்வைத்து 32 தினங்கள் உண்ணு நோன்பிருந்து உருகி உருகியே மாண்டு போனர் அன்னை பூபதி:

எமது மண்ணில் இறைமையுடன் வாழ்வதற்காக மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் பாரத அரசினல் தூக்கியெறியப்பட்டன எமது தேசம் மக்களுக்காய் போராடிய ஓர் உன்னத தேசபக்தரை இழந்தது. ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு இது:

இந்நிகழ்ச்சி இந்தியாவின் கபடத்தனத்தை தோலுரித்துக்காட்டியது: விடுதலைப்புலிகளுக்கு மக்களாதரவு கிடையாது என்ற இந்திய அரசின் பொய்ப் பிரசாரம் முறியடிக்கப்பட்டு மக்களே புலிகள் என்பதும். எமது உரிமைப் போராட்டத்தின் தேவையும் மீண்டும் ஒரு தடவை உலக அரங்கில் கொணரப்பட்டன.

அன்னைபூபதி மேற்கொண்ட உண்ணு நோன்பானது ஒரு சாதாரண சம்பவமல்ல: அது எமது விடுதலைப் பாதையின் சரித்திரம்:

எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பிடித்துக்கொண்ட அன்னை பூபதி எமது விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பெரும் பங்களிப்பையும் உலகத்திற்கு எடுத்தியம்பிய ஓர் உன்னத தியாகி:

இந்திய ஆக்கிரமிப்பிற்கு எதிரான போரின் விளைவாக இன்று இந்திய ஆக்கிரமிப்புப் படை எம் மண்ணிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மக்கள் ஆக்கிரமிப்பிற்கு அடிபணிய மாட்டார்கள் என்பது நிரூபிக்கப் பட்டுள்ளது:

இந்நிலையில், தியாக வேள்வியில் உயிர் நீத்த அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள் எமது தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப் படுகின்றது. அன்னையின் தியாகத்தை பெருமையுடன் நினைவு கூருகின்றனர் எம் மக்கள்

இப் புனித நாளில்..., எமது தாயக விடுதலைக்கான போராட்டத்திற்கு எமது பூரண பங்களிப்பினை நல்குவோம் என எமது தாயகத்திலுள்ள அனைத்துப் பெண்களும் உறுதி பூணுவோம் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது


# அன்னை பூபதிக்கு அஞ்சலி



கத்தியின்றி - இரத்தமின்றி செய்யும் இந்த யுத்தம்

வெற்றிக்கு மேல் வெற்றியாக குவிக்கும் இந்த யுத்தம்

அன்னை பூபதி-ஒரு அணையா விளக்கு-தியாகச் செம்மல்-இவர் விட்ட பணி தொடர மக்கள் யாவரும் முன் நிற்க வேண்டும்.

வலி கிழக்கு வடபகுதி பல. நோ. கூட்டுறவுச் சங்கம்

இராசவீதி, அச்சுவேலி.

04188

அரசு பேச்சுக்கு அழைத்ததற்கு

# எமது உறுதிமிக்க போராட்ட சக்தியை உணர்ந்ததே காரணம்

- ஆஞ்சநேயர் விளக்கம்

''விடுதலைப் புலிகள் எங்கள் காவல் தெய்வங்கள். அவர்களின் உறுதி மிக்கபலம்வாய்ந்த போராட்டத்தினுல் தான் இன்று இந் நாட்டில் தமிழன் தலை நிமிர்ந்து நிற்கின்முன்''

இவ்வாறு மாதகலில்அன்னை பூபதியின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் நடைபெற்ற உண்ணு விரதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் உறுப்பினர் திரு. க, செல்வநாயகம் குறிப்பிட்டார்.

மாதகல் புனித அந்தோனியார் ஆலய முன்றலில்மாதகல் பொது மக்கள்சார்பில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த உண்ணு விரதத்தில் பெருந்தொகையான பெண்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். அன்னை பூபதியின் பெரிய அளவிலான உருவப் படம் வைக்கப்பட்டு மலர் மாலைகளினுல் அலங்கரிக்கப் பட்டிருந்தது. உண்ணு விரத இறுதியில நிகழ்த்தப்பட்ட அஞ்சலி உரைகளுக்கு திரு. ஜேம்ஸ் தலைமை தாங்கினுர்.

விடுதலைப் புலிகளின் மக்கள் விடுதலை முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் உரையாற்றுகையில் குறிப்பிட்ட தாவது; இலங்கை அரசானது எம்மீது இரக்கம் கொண்டோ அல்லது பாசம் வைத்தோ எம்மை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வில்லை. எமது உறுதி மிக்க போராட்ட சக்தியை நன்கு உணர்ந்து கொண்டாஇலங்கை அரசு சிங்கள மக்களை பாதுகாக்கவும் தமது ஆட்சியை தொடர்ந்து நடத்தவுமேபேச்சுவார்த்தைக்கு முன்வந்தது. எம்மை ஏமாற்ற எந்த சக்தியாலும் முடியாது நாம் ஆன்மீக ரீதியில் அரசியல் ரீதியில் இராஜதந்திர ரீதியில் தொடர்ந்து போராடுவோம் இதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியமானது. என்முர்.

திரு. வி. செகராச சிங்கம், பாடசாலை அதிபர் திரு. சவரிமுத்து ஆகியோரும் உரையாற்றினுர்கள். (13)

## சுதேச வைத்தியர்களின் குறைகள் தீர்க்கப்படும்

''ஆயுர்வேத வைத்தியத் துறை விருத்தி அடைந்துள்ள அதே வேளையில் இந்நாட்டின் பாரம்பரிய முறைகளுக்கு கட்டியம் கூறும் வைத்தியர்களின் குறைகளை நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும்''.

இவ்வாறு சுதேச வைத்தியத்துறை அபிவிருத்தித்திட்ட அமைச்சர் திரு. எச் பி. வன்னிய நாயகா ஆராச்சிகட்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மையாவ என்னுமிடத்தில் ஆயுர்வேத வைத்தியநிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினுர்.

## அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி




ஊட்டி வளர்த்த தாயே
ஊனை மறந்தாய் - திலீபன்
காட்டி விட்ட பாதையிலே
கதையை தொடர்ந்தாய் !

ஏற்றி வைத்த தீபத்துக்கு
ஊற்றி விட்ட நெய்யாக !
உருகி விட்ட அன்னை உன் — தியாகமே !
ஏகாதிபத்தியத்துக்கு எதிரான — யாகமே !

பிறந்து வாழ்வது வாழ்க்கையல்ல
இறந்தும் வாழ்வதே வாழ்க்கை;
இறந்தும் நீ வாழுகின்ருய் — ஈழமககள்
இதயங்களில் இன்னும் நீ வளருகின்ருய்

**மகேஸ்வரி ஸ்ரோர்ஸ்**
**கண்டி வீதி,**
**திரு முறிகண்டி**

04178

## ஞாபகார்த்த வெற்றிக்கேடயம்

இளம் வயதில் தனது வாழ்வை முடித்துக்கொண்ட விஞ்ஞான பட்டதாரியும் சிறந்த விளையாட்டு வீரருமான நா. தெய்வேந்திரத்தின் ஞாபகார்த்தமாக அவரின் தந்தை திரு நாகராசா பெறுமதி மிக்க ஓர் கேடயத்தை ஊர்காவற்துறை உ, அ. அதிபரிடம் கையளித்துள்ளார்.

இவ் விளையாட்டு வீரர் அங்கம் வகித்த ஊர்காவற்துறை சென் அந்தனிஸ் விளையாட்டுக் கழகமும் தம்பாட்டி, காந்திஜி விளையாட்டு கழகமும் சமீபத்தில் சென. அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றமிக விறுவிறுப்பானஉதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் மோதி சென் அந்தனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிவாகைசூடி இவ் ஞாபகார்த்தக் கேடயத்தைதட்டிச் சென்றமைஇங்குகுறிப்பிடத்தக்கது.

## ஈஸ்ரர் விழா

புதுவருட ஈஸ்ரர் விழா அண்மையில் கலைச்சுடர் சனசமூக நிலையம் கிறிஸ்து இளைஞர் மன்றம் கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் ஆகிய மூன்றும் இணைந்து கிறிஸ்துஅரசர் ஆலய முன்றலில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது

பிரதம விருந்தினர்களாக அருட்திரு சீ இ, நி. குணசீலன் அடிகளாரும் சிவஹிபாலசந்தசர்மாவும கலந்து கொண்டனர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டயாழ் மாநகர ஆணையாளர் திரு பி. பாலசிங்கம் பேசும்பொழுது நான் இந்த விழாவில் காணும்காட்சி என் உள்ளத்தை உவகையில் ஆழ்த்துகின்றது கிறிஸ்தவர்களும் சைவர்களும் ஒன்றுகூடி விழா எடுத்திருக்கின்றீர்கள். வேறுபாடுகளை மறந்து ஒரு கிராம மக்கள்என்பதை நன்கு காட்டியுள்ளீர்கள் நாம் ஒன்று கூடி வாழ்ந்தாற்ருன் எமது கலை கலாசாரம் நிலைபெறும் என்ருர்.இந்தமுன் மாதிரியை சகலரும் பின்பற்ற வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்ச்சிகளும் காலை 8 30 தொடக்கம் இரவு 11 மணி வரை இடம் பெற்றது.

# செய்தி மஞ்சரி

## விடைத்தாள் மீளாய்வு

ஜி சி ஈ. உயர்தரப் பரீட்சை விடைப்பத்திரங்களை மீளாய்வு செய்வதற்காக இதுவரை 18, 500 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்று பரீட்சை ஆணையாளர் தீ. ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். விடைப் பத்திரங்களை மீளாய்வு செய்வது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் தற்சமயம் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன என்றும் அவர் கூறினுர்.

## இறக்குமதி தாமதம்

சீமெந்து, சீனி, உரம் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு கொழும்புத்துறைமுகத்துக்கு வந்த பத்துக் கப்பல்கள் கடந்த ஒருவார காலமாகத் தரித்துநிற்கின்றன தாமதக் கட்டணமாக இக்கப்பல்களுக்கு பல இலட்ச ரூபா செலுத்த வேண்டி நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சீரான பணி

வடபகுதி ரயில் சேவைகள் வழமைக்கு வந்ததையடுத்து பொதிகள் அனுப்பும் பணி சீராக நடைபெறுகின்றது. லொறிகளின் கூலி அதிகரிப்பினை அடுத்து பலர் தமது பொருட்களை ரயில் மூலம் அனுப்பி வருகின்ருர்கள் இதனுல் ரயிலில் பொதி அனுப்புபவர்களின் தொகை நளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

## சந்திரிகா சம்மதம்

ஸ்ரீ லங்கா மக்கள்கட்சிக்கும் அக்கட்சியின் தலைவி திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகள் குறித்து அக்கட்சியின் அரசியல் குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்த திருமதி குமாரணதுங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

## அதிகரித்த வருமானம்

125 வருடகால ரயில்வே திணைக்கள வரலாற்றில் மிகப் பெரும் காலாண்டு வருமானத்தை திணைக்களம் இவ்வருடம் பெற்றுள்ளது. இவ்வருடம் முதல் 3 மாதங்களில் ரயில்வே திணைக்களம் 22 கோடி ரூபா வருமானத்தைப் பெற்றுள்ளது. ரயில்வே முகாமையாளர் திரு. டி. சி லேல்வல இத்தகவலை வெளியிட்டார்.

## சீனவுடன் இணைந்து பஸ்சேவை

இலங்கையில் பஸ்கள் உற்பத்தி செய்யப்படவுள்ளன. மேல் மாகாணசபை சீனவுடன் இணைந்து இம் முயற்சியில் ஈடுபடவுள்ளது. முதற் கட்டமாக சீனத்துப் பஸ்கள் கொண்டு கூட்டு பஸ் சேவை ஒன்று நடத்தப்படும்.

இது இலங்கையில் இன்னெரு பஸ் சேவையாக இருக்கும். மேல் மாகாண முதலமைச்சர் நேற்று முன்தினம் தமது அமைச்சில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவலை வெளியிட்டார்.

## அன்னை பூபதிக்கு அரசடி ஜனசக்தி ச. ச. நிலையத்தின் இதய அஞ்சலி




விழி கலந்த சித்திரமே! விலைமதியா ரத்தினமே!
வீரத்தமிழ் மறக்குடியின் குலவிளக்கே!
உளிகொண்டு நினை நாங்கள் நெஞ்சில் சிலையாக
உருவாக உயிர் கொடுத்த உத்தமியே வாழியவே!

அன்னையர் ஆயிரம் ஆயினும் பூமியிலே
அன்னையென்று அனைவரும் அழைப்பது ஓர் சிலர்—
அன்னை பூபதி நம் அனைவர்க்கும அன்னையாம்
அன்னையென் பண்புக்கு இலக்கணம்வகுத்தாளே!

ஜனசக்தி சனசமூக நிலையம்
அரசடி வீதி, நல்லூர்.

04180

# நாம் ரத்தம் சிந்தியது உரிமை இழந்த அடிமை வாழ்வுக்கல்ல

## - விடுதலைப்புலி ரவி சூளுரை

"வடக்கு கிழக்குப் பிரதேசத்தை பிரிக்கமுடியாது. அதன் ஒருமைப்பாட்டினைச் சிதைக்கவும் முடியாது" என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தம்பலகாமம் ஆரசியற் பொறுப்பாளர் திரு. ரவி சொன்னார்.

"விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் எதனையும் விட்டுக் கொடுக்கவில்லை. நாம்போராடியது. இரத்தம் சிந்தியது, பல அழிவுகளைக் கண்டது எமது உரிமைகளை விட்டுக் கொடுத்து அடிமை வாழ்வு வாழ்வதற்கல்ல.

"எமது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக் கட்சியானது இருமுக்கிய குறிக்கோள்களுக்காகப் போராடுகின்றது. தமிழ் முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுவது தமிழ் முஸ்லிம் மக்களின் பூகோள ஒருமைப்பாட்டுக்குப் போராடுவது ஆகும். தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்கால நலன் கருதி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் மத்தியில் தமது வேலைத்திட்டங்களைப் வெளிப்படுத்தி செயற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட முன்வந்துள்ளனர்.

"இவ்வேலைத் திட்டங்கள் நன்கு செயற்பட சகல இன மக்களும் ஒன்று சேர்ந்து ஆதரவு நல்க வேண்டும்." என்றார்.

சீனக்குடா வெள்ளை மணல் அல்- அஸ்ஹர் மகாவித்தியாலயத்தில் திரு. கே. எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில்பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

## சுவையான செய்திகள்

### காக்க வைத்த மாமனார்!

கப்டன் ரூபன் ரஸல் என்பவரிடம் அன்ரு என்ற இளைஞன் வந்து, அவரது மகளைத் திருமணம் செய்து கொள்ள ஒப்புதல் கேட்டான். கப்டன் இந்த இளைஞனின் துணிச்சலை சோதிக்க அவனைத் திமிங்கில வேட்டைக்கு அழைத்துச் சென்றார். 54 மாதங்கள் வேட்டை நடந்தது. மேலும் 48 மாதங்கள் கழித்தே - அதாவது சுமார் எட்டரை ஆண்டுகள் கழித்தே - தன் மகளை அந்த இளைஞன் மணந்து கொள்ளச் சம்மதித்தார்.

### கத்தினல் - கத்தும் மாளிகை!

இத்தாலியில் 'வில்லா கிமொனெட்டர்' என்ற பெயரில் ஒரு மாளிகை மிலன் நகரில் அமைந்துள்ளது. இம்மாளிகைக்குள் போய் நாம் ஒரு முறை கத்தினல் அது அறுபது முறை எதிரொலிக்கும். இங்கு நம்மவர்கள் போய் கத்தி சண்டை பிடித்தால் எப்படி இருக்கும்?

### பாம்பில்லை- பயமில்லை!

உலகில் பாம்புகள் இல்லாத நாடுகளில் அயர்லாந்தும் ஒன்று. ஆனல் இந்த நாட்டில் பாம்பின் குணம் கொண்ட மனிதர்கள் உண்டா எனக்கேட்டு விடாதீர்கள்.

### பிளாஸ்ரிக் குப்பை வாளிகள்

குப்பைகள் சேகரிக்கும் பொருட்டு கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட வீடுகளுக்கு ஐந்து வருட உத்தரவாதமுள்ள பிளாஸ்ரிக் குப்பை வாளிகள் வழங்கப் படவுள்ளன.

ஏற்கனவே வழங்கப்பட்ட கறுத்த பொலித்தீன் பைகளை மக்கள் துஷ்பிரயோகம் செய்ததால் அவற்றினல் சரியான பலன் கிடைக்காமல் போனதாலேயே இப் புதிய வாளி முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

## முரசொலிக்கு வந்த கடிதம்

### 'மீளக்குடியமர்தல் நிதிபெறப் பொதுமக்கள் படும்பாட்டைக் கவனிப்பார்களா'

ஆசிரியர்
முரசொலி

புனர்வாழ்வு அமைச்சினல் வழங்கப்பட்டு வரும் மீளக்குடியமர்தல் நிவாரணத்திற்கான இரண்டாயிரம் ரூபாவில் எமது மாகியப்பிட்டியில் வசிக்கும் முந்நூறு குடும்ப மக்களுக்கு எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. இவ்விடயத்தைக் கிராமசேவகர் ஊடாக உதவி அரசாங்க அதிபர்க்கு அறிவித்தும் எதுவித பதிலும் கூறுமல் மழுங்கடித்துக் கொண்டு செல்கிறார்கள். இவ்விடயத்தை ஆராய்ந்து, நிவாரணம் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

சோ. உதயகுமார்
மாகியப்பிட்டி மக்கள் சார்பில்

### பொலிகண்டி இ. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்குமா?

ஆசிரியர்
முரசொலி

மேற்படி பாடசாலையில் இயங்கி வந்த பெற்றார் அபிவிருத்திச் சங்கம் தற்போது இயங்கச் செய்ய எமது இளைஞர்கள் முயற்சி எடுத்தும் பாடசாலைத் தலைமைப் பீடமும் ஒரு சில ஆசிரியர்களும் முட்டுக்கட்டை போட்டு வருகின்றனர். இதனல் இப்பாடசாலையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியாத நிலையுண்டு இப் பாடசாலையைச் சர்வாதிகார ஆட்சிபோல் நடாத்தி வருகின்றனர். பாடசாலைக் குறைபாடுகளைப் பற்றி யாரும் கதைத்தால் உனக்கு உரிமை இல்லை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு உரிமை உண்டு என்கிறார்கள் அப்படியானல் அபிவிருத்திச் சங்கத்தில் உறுப்பினர் களாகச் சேர்ந்தாலும் அது இயங்காமல் எப்படி அங்கத் தவராவது? எமது கிராம இளைஞர்கள் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் நிலை இருந்தும் ஒரு சில தீயசக்திகளால் அவைகளைச் செய்ய முடியாத நிலை தலைமைப் பீடம் மாணவர்களின் கல்வியைப் புதை குழியில் புதைக்கப் பார்க்கிறது. இது பற்றி மேலிடத்திற்கு அறிவித்தும் அவர்களும் ஒருவித நடவடிக்கையும் எடுக்கவில்லை ஏன் இந்தப் பாகுபாடு? எனவே இனியாவது மேலிடம் இதிற் கவனம் செலுத்தி இப்பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தை மீண்டும் இயங்கச் செய்து எமது மாணவர்களின் கல்வி அறிவை வளப்படுத்துமா?

பொலிகண்டி நலன்விரும்பி


# மக்கள் வங்கி

## அடகு நகைகள் மீளளித்தல்

பின்வரும் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு அவற்றை மீளப் பெற்றுக் கொள்வதற்காகப் பணம் செலுத்தியவர்களது நகைகள் கீழ்க்கண்டவாறு மீளளிக்கப்படும்.

**யாழ் மாவட்டக் கிளைகள்:-** வழங்கும் திகதி 1990.04.20- வெள்ளிக்கிழமை
வழங்கும் இடம் - யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், (யாழ் கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது )

1. யாழ். பிரதான வீதிக் கிளை
புங்குடுதீவுக் கிளை -1989.10.12. திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு.
2. யாழ். நவீன சந்தைக் கிளை - 1989.10.10 திகதிவரை பணம் செலுத்தியவர்களுக்கு.
3. சாவகச்சேரிக் கிளை
பளைக் கிளை - 1989.10. 15 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
4. யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை - 1989.10.15வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
5. யாழ் கன்னாதிட்டிக் கிளை
சங்கானைக் கிளை - 1989.10.12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
6 சுன்னாகம் கிளை - 1989.10.11 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
7. காங்கேசந்துறைக் கிளை - 1989.10.12 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
8 வல்வெட்டித்துறைக் கிளை- 1989.10.18 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.
9. ஊர்காவற்றுறைக் கிளை - 1989.09.25 வரை பணம் செலுததியவர்களுக்கு.
10. பருத்தித்துறைக் கிளை
நெல்லியடிக் கிளை - 1989.09.19 வரை பணம் செலுத்தியவர்களுக்கு.

**கிளிநொச்சி மாவட்டம்:** வழங்கும் இடம் - கிளிநொச்சி தபாற் காரியாலயம்.

| | | வழங்கும் திகதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | பரந்தன் கிளை - (1989.09.28வரை பணம் செலுத்தியவர்களுக்கு) | 1990. 04. 20 | வெள்ளி |
| 2. | கிளிநொச்சிக்கிளை (1989.06.26வரை பணம் செலுத்திபவர்களுக்கு) | 1990. 04. 24 | செவ்வாய் |

**முல்லைத்தீவு மாவட்டம்:**

முல்லைத்தீவுக் கிளை. இக்கிளையில் அடகுவைத்த நகைகளை மீளப் பெறுவதற்காக 1989.9.21 திகதி வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் முல்லைத்தீவு ஜெசி தியேட்டரில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் விசேட கரும பீடத்தினூடாக மீளளிக்கப்படுகின்றது.

மாங்குளம் கிளை. இக்கிளையில் அடகுவைத்து மீளப் பெறுவதற்காக 1989 10. 22 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 18-ம் திகதி முதல் (புதன் கிழமை) மாங்குளம் மக்கள்வங்கியில் வைத்து மீளளிக்கப்படும்.

**வவுனியா மாவட்டம்**

வவுனியாக் கிளை. இக்கிளைக்குரிய 1ஆம் கட்ட நகைகள் வவுனியா பொலிஸ் நிலையத்தில் வைத்து இம்மாதம் 18ஆந் திகதி முதல் மீளளிக்கப்படும்

**மன்னார் மாவட்டம்**

மன்னார் கிளை. இக்கிளையில் அடகுவைத்து மீளப் பெறுவதற்காக 1989. 09. 21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 20ஆந் திகதி முதல் மன்னார் மக்கள் வங்கி கிளையில்வைத்துமீளளிக்கப்படும்.

முருங்கன் கிளை: இக்கிளையில் அடகு வைத்து மீளப் பெறுவதற்காக 1989 09.21 வரை பணம் செலுத்தியவர்களது நகைகள் இம்மாதம் 25ஆந் திகதி முதல் (புதன்கிழமை மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து மீளளிக்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு சம்பந்தப்பட்ட கிளை முகாமையாளருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிராந்திய முகாமையாளர்.

மக்கள் வங்கி, பிராந்தியத் தலைமையகம்
யாழ்ப்பாணம்

04166

# ரமழான் சிந்தனைகள்

## செருப்பு அணிவதிலும் ஒழுக்கம்

"உங்களில் ஒருவர் செருப்பை அணியும்போது முதலில் வலது காலில் அணிவது கொண்டு தொடங்கவும்! செருப்பைக் கழற்றும்போது முதலில் இடது காலில் கழற்றுவது கொண்டு தொடங்கவும்" என அருமை நாயகம் (ஸல்) அவர்கள் அறிவுரை வழங்கினுர்கள். ஜாபீர் (ரலி) அவர்கள் கூறுகின்ருர்கள். நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுடைய செருப்பின் ஒரு வார் அறுந்து போனுல் அதைச் சீர்படுத்தும் வரை மற்ருெரு செருப்பில் நடக்க மாட்டார்கள்

மேலும் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினுர்கள்- 'கறந்த பால் முலையிற் திரும்ப ஏருததைப்போல் இறைவனின் அச்சத்தால் அழுதவர் நரகம் பிரவேசிக்கமாட்டார்.

"உங்களுக்கும் பொருமைக்கும் நான் எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில், நெருப்பு விறகைத் தின்று விடுவதுபோல, நிச்சயமாகப், பொருமை நன்மைகளைத் தின்றுவிடும்" என நாயகம் (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்தார்கள்

## சவூதி அரேபியாவில் பாக். பிரதமர் பெனுஸிர்

பாகிஸ்தான் பிரதமர் பெனுஸிர் பூட்டோ சவூதி அரேபிய விஜயம் மேற்கொண்டுள்ளார். முஸ்லிம் யாத்திரையின் பொருட்டு வந்திருக்கும் இவர் சவூதி அதிகாரிகளையும் சந்தித்துப்பேசுவார்.

பிரதமராகப் பதவியேற்ற பின் இவர் சவூதிக்கு வருவது இது மூன்ருவது தடவையாகும்.

பாகிஸ்தானுக்கு சவூதி அரேபியா பெருமளவு நிதியுதவி வழங்கிவருகின்றது.

பெருந்தொகையான பாகிஸ்தானியர்கள் சவூதிஅரேபியாவில் வேலை செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## மனகுவாவில் இரு ராணுவ விமானங்கள் எரிந்தன

மனகுவா விமானநிலையத்தில் நிகழ்ந்த வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரண்டு இராணுவ விமானங்கள் முற்ருக நாசமாகின என்று அறிவிக்கப்படுகின்றது.

விமானநிலைய ஆயுதக் குதமொன்று வெடித்ததாலேயே இவ்விபத்துச் சம்பவித்தது.

வெடிப்புச் சம்பவத்தையடுத்து விமானநிலையம் உடன் மூடப்பட்டது. அடுத்துள்ள காணியொன்றில் பரவிய தீ ஆயுதக்குதம் வெடிப்பதற்கு ஏதுவாகியதாம்.

### நிதியுதவி

அமெரிக்க ஆதி அழகன் தேவஸ்தானத்தால் திருக்கோயில் திருநாவுக்கரசு குருகுல அநாதை இல்லத்திற்கு 19,750 ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி வைபவரீதியாக வழங்கப்பட்டது

பாரத குற்றச்சாட்டுக்கு பாக். மறுப்பு

## எம்படைகள் எப்போதுமே விழிப்பு; புதிதாக இல்லை

'பாகிஸ்தான் படைகள் எப்போதும் உஷார் நிலையில் தான் இருக்கின்றன. இந்தியா தான் தன் படை பலத்தை எல்லைப்புறத்தில் அதிகரித்துள்ளது''

இவ்வாறு பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

'இந்திய எல்லைப்புறத்தில் பாகிஸ்தான் படைகள் குவிக்கப்பட்டிருப்பதான செய்தியில் உண்மையில்லை' என்று பாகிஸ்தான் மறுத்துள்ளது.

பாகிஸ்தான் எல்லைப்புறத்தில் ஆயுததாங்கிகள் பல நகர்த்தப் பட்டிருப்பதாகவும் பாகிஸ்தான் துருப்புகள் அங்கு அனுப்பப் பட்டிருப்பதாகவும் இந்தியப் பிரதமர் திரு. வி பி. சிங் கூறியிருந்தார்.

ராடர் உபகரணம் ஒன்றும் எல்லைப்புறத்துக்குக் கொண்டு வரப்பட்டதாகவும் திரு. சிங் தெரிவித்திருந்தார்.

இச்செய்திகளுக்கே பாகிஸ்தான் மறுப்புத் தெரிவித்துள்ளது.

### எய்ட்ஸ் பரத்தையர்

நியூயோர்க் விபசாரிகளில் மூன்றுக்கு ஒருபெண் எயிட்ஸ் கிருமியினுற் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வு கூறுகின்றது. 950 விபசாரிகள்மீது 9 மாதங்கள் ஆய்வு நடத்திய டாக்டர் ரோய்ஸ் வாலஸ் இதனை வெளிப்படுத்தியுள்ளார்.

### விருந்து ருசத்தில் கூற்றுவன்

உத்தரப் பிரதேசத்தில் உள்ள ராஜ்பூரில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் விருந்துண்ட 80பேர் உணவு விஷமாகி இறந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

120 பேர் மருத்துவமனைக்கு விரையப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### நாசகாரி கப்பல்

பாகிஸ்தானின் கடற்படை நாசகாரிக் கப்பலான'மாஒவின் கொழும்பு துறைமுகத்திற்கு 15ஆம திகதி வந்தடைந்தது.

15ஆயிரத்து 380 தொன் எடையுள்ள இக் கப்பலில் 19 அதிகாரிகளும் 270 சிப்பாய்களும் பணி புரிகின்றனர்

கொழும்பை விட்டு புறப்படும் இக் கப்பல் இம் மாதம்23ம் திகதி அளவில் கராச்சியை சென்றடையும்.

## மூவர் சென்ருல் இருவகைத் தண்டனை

அம்பாறை மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் விபத்துகள் நடைபெறுவதைத் தடுக்குமுகமாக விடுதலைப்புலிகள் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் லைசென்ஸ் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் மூவர் மோட்டார் சைக்கிளில ஏற்றிச்செல்லப் பட்டால 50 ரூபா அபராதம் விதிக்கப்படுகிறது. அத்துடன் ஒரு மணித்தியாளம் வரை அம்மோட்டார் சைக்கிளையும் பாவிக்கக் கூடாது என்று தடையும் விதிக்கப்படுகிறது.

## மார்கிரேட் தட்சரின் செல்வாக்கு சரிகிறது?

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் பிரிட்டிஷ் வாக்காளிக்கும் சரித்திரத்தில் மிகவும் செல்வாக்கு மங்கிய பிரதமர் என்று திங்களன்று ரைம்ஸ் தினசரி வெளியிட்ட ஆய்வு ஒன்றின் முடிவு தெரிவிக்கின்றது.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்ற ஆய்வின் பிரகாரம் 20 வீதத்தினர் பிரதமரை ஆதரிப்பவர்களாகவும் 76 வீதத்தினர் வெறுப்பதாகவும் தெரியவந்துள்ளது என்று ராய்ட்டர் தெரிவித்துள்ளது.

## கறுப்புப்பண நடவடிக்கைகள் குறைந்துள்ளதாக அறிவிப்பு

வி. பி. சிங்கினது புதிய இந்திய அரசில் கறுப்புப்பணத்தின் நடவடிக்கைகள் குறைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது

இந்தியாவில் கணக்கில் வராமல்எண்பதினுயிரம் கோடி ரூபா கறுப்புப்பணமாக இந்தியாவில் இருப்பதாக அரசு மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது.

ராஜீவ்காந்தியின் அரசில் கறுப்புப் பணத்தொகை கூடுதலாக இருந்ததாகவும் தற்போது குறைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது

### மெய் வல்லுநர் போட்டி

புங்குடுதீவு அமெரிக்கமிஷன் வித்தியாலயத்தின் மெய் வல்லுனர் போட்டி அண்மையில் சு. யோ. பூராசா அதிபர் தலைமையில் நடைபெற்றது.


புங்குடுதீவு தபாலக ஊழியர்கள் வெற்றிக்கேடயமொன்றை அன்பளிப்பாக வழங்கினுர்.

### அடகு நகை மீளளிப்பு

யாழ் மாவட்டத்தில் கடந்த செப்டெம்பர் மாதம் வரை பணம் செலுத்தி இதுவரை தமது அடகு நகைகளை மீளப் பெருதோருக்கு நாளை வெள்ளிக்கிழமை யாழ் பொலிஸ் நிலையத்தில் வைத்து அவை வழங்கப்படவுள்ளன.

இது போன்று கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையில் பணம் செலுத்தி நகைகளை மீளப் பெருதவர்கள் 20,24ம் திகதிகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## அன்னை பூபதிக்கு அஞ்சலி



அஞ்சிச் சிணுங்குவதும் – தினம்
அழுது கலங்குவதும் - இனி
வஞ்சியர் செய்கை அல்ல! – உன்
வாழ்வினை எவர் வெல்ல?

உரிமையில்லாமல் உண்டு கொண்டிருப்பதில்
உனக்குச் சம்மதமில்லை!
ஏனெனில்
சுதந்திரமில்லாமற் சுவாசித்துக் கொண்டிருப்பது
உன்மதமில்லை

**மெடிக்கல் சென்ரர்**

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

04184

## அன்னை பூபதிக்கு அஞ்சலி




போராட்டத் தோட்டத்தில்
இந்தப்
பொன்மலரின் தோற்றம்;
ஒரு
பூகம்பப் பெண்மையின்
புயல் வடிவச் சீற்றம்!

நெருப்பலைகள் மோதுமொரு
நேரிழையாள் நெஞ்சம்!
பொறுப்புடனே உயிர்நீத்த
போராட்ட மஞ்சம்!
இவள்
கவலைப்பட்டதும்;
கலங்கிச் செத்ததும்;
தான் அணிய வேண்டிய
கைவளை வளையல்களுக்காக அல்ல!
தாயகம் அணிந்திருக்கும்
''கைவளை விலங்குகள்''
நொருங்க வேண்டும் என்பதற்காகவே!

நாளை இங்கு வாழ வேண்டும்
நமது நாட்டுத் தலைமுறை!
அந்த
வேளை இங்கு பிறப்பதற்கு
உதவும் உன்றன்
கல்லறை!

**தனியார் கல்விநிலைய ஒன்றியம்**

நாவற்குழி கோயிலாக்கண்டி

04185

# நிலாவரைக் கிணற்றின் நீர் விநியோகத் திட்டம் மீள ஆரம்பிக்கப்படும்

1986 ஆம்ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இடை நிறுத்தம் செய்யப்பட்ட புத்தூர் நிலாவரைக் கிணற்றில் இருந்து யாழ் மாநகர பகுதிகளுக்கான நீர் விநியோகத்திட்டகத்தை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது வரை காலமும் இத்திட்டத்திற்குரிய வேலைகள் யாவும் ஸ்தம்பித நிலையடைந்திருந்தன. முதல் கட்டவேலையாக 29 லட்சம் ரூபா செலவில் 7 மைல் தூரத்திற்கு குழாய் புதைக்கப்படும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

ஏற்கனவே முதல் கட்ட வேலையில் இராச வீதியூடாக 3 மைல் தூரத்திற்கு குழாய்கள் புதைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் முழுவதுக்கும் 90 லட்சம் ரூபா யாழ் மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது குழாய்கள் புதைப்பதற்கு இது வரை 6 லட்சம் ரூபாமட்டுமே செலவிடப்பட்டுள்ளது.

இந்த பாரியதிட்டம் பூர்த்தியடையுமானால் யாழ் மாநகரப் பகுதியிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சனை முற்றாக தீர்க்கபட்டு விடுமென எதிர் பார்க்கப் படுகிறது.(03)

## பொத்துவில் கடற் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள்

பொத்துவிலிலும் அதனை அண்டிய கிராமங்களைச் சேர்ந்த கடல் பகுதிகளிலும் அடர்ந்த காட்டுப் பகுதிகளிலும் இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான கிறியரக குண்டு வீச்சு விமானங்கள் தாழப்பறந்து ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகின்றது. இக்குண்டு வீச்சு விமான ரோந்து காரணமாக ஆழ் கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் கடந்த ஒரு மாதமாக மீன் பிடிக்கச் செல்லவில்லை என்றும் அறியவருகிறது.

வவுனியா வர்த்தக சங்க கோரிக்கை

## வவுனியா வர்த்தக நிறுவன பெயர்ப் பலகைகள் தமிழில்

வவுனியா மாவட்ட சகல வர்த்தக உரிமையாளர்கள் தமது நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை தமிழுக்கு முதலிடம் கொடுத்து சிறப்பிக்கும்படி வவுனியா வர்த்தக சங்கம் கேட்டுள்ளது.

அத்துடன் தத்தமது கடைகளை சீர் செய்து முன்புறத்தை அழகுபடுத்தும் படியும், தற்காலிக அமைப்புக்களை நீக்கும் படியும் வர்த்தகசங்கம் ஆலோசனை தெரிவித்துள்ளது.

தமிழுக்காகவும் தமிழின உரிமைக்காகவும் போராடி உயிர் நீத்தவர்களின் அபிலாசைகளை மதிக்கும்படியாக மேற்கண்ட நடைமுறைகளை பின்பற்றும் படியும் வர்த்தக சங்கம் கேட்டுள்ளது. (11)

வல்வெட்டி: பருத்தித்துறை

## திருத்த வேலைகள் முடிந்ததும் பொலிஸ் நிலையங்கள் இயங்கும்

வடமராட்சிப் பகுதியில் கடந்த 11ம் திகதி மூடப்பட்ட இரு பொலிஸ் நிலையங்கள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கருகில் உள்ள வீட்டிலும் வல்வெட்டியில் உள்ள வீட்டிலும் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு வீடுகளினதும் திருத்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருத்த வேலைகள் முடிவடைந்ததும் தமிழ் பொலிஸாருடன் இருபொலிஸ் நிலையங்களும் அங்கு இயங்குமென யாழ் பொலிஸ் அத்தியட்சகர் திரு ரி. கே ஜயராஜன் தெரிவித்துள்ளார்.(03

## அனலை தீவு பயணிகள் படகு நேற்று நடுக்கடலில் தத்தளிப்பு

நேற்று அனலைதீவில் இருந்து புறப்பட்ட தனியார் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக நடுக்கடலில் 150 பயணிகளுடன் தத்தளித்துக்கொண்டிருந்தது.

சுமார் ஒருமணி நேரம் பயணிகளுடன் தத்தளித்த இப் படகு பின்னர் இன்னொரு படகு மூலம் மீண்டும் அனலைதீவிற்கு இழுத்துச் செலப்பட்டது.

இப்பகுதியில் சேவையில் ஈடுபட்டுவந்த பல படகுகள் பழுதடைந்த நிலையில் இருக்கும் இவ்வேளையில் உள்ள ஒரு சில படகுகளும் இவ்வாறு அடிக்கடி நடுக்கடலில் பழுதடைவதையிட்டு பலரும் அதிருப்தி தெரிவித்தனர்,

## மேலும் சில அவசரகாலவிதிகள் நேற்று நள்ளிரவு முதல்நீக்கம்

அவசரகாலச் சட்டத்தில் உள்ள மேலும் சிலவிதிகள் நேற்று நள்ளிரவு முதல் நீக்கப்பட்டுள்ளது பொதுக்கூட்டங்களை நடத்துவதற்கான தடை, அத்தியாவசிய சேவைகளின் மீதிருந்த கட்டுப்பாடு போன்ற சில அவசரகால விதிகளே நீக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டு பாதுகாப்பு நிலைமைகள் சீரடைந்து வருவதை முன்னிட்டு மேலும் சில அவசரகால விதிகள் விரைவில் நீக்கப்படலாம் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## வன்னி இலங்கைப் படையின் செயலுக்கு மக்கள் கண்டனம்

வன்னி பாவற்குளம் முதலாம் யூனிட் அமைந்துள்ள மகாவித்தியாலயத்தில் கடந்த சில ஆண்டுகளாகநிலைகொண்டிருந்த இலங்கை இராணுவம் இப்பாடசாலையினை விட்டு வெளியேறத் தொடங்கியதும் கட்டிடத்தினை உடைத்து பொருள்களை அயலில் உள்ள பெரும்பான்மை சமூகத்திற்கு வழங்கி வருகின்றனர்.

இலங்கை இராணுவத்தின் இந்த செயலை அவ்வூர் மக்கள் வன்மையாக கண்டித்துள்ளனர்.

இப் பாடசாலை கட்டிடத்தினை விட்டு வெளியேறி இராணுவம் அயலில் உள்ள கட்டிடம் ஒன்றில் தங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது (11)

## கோவில் உண்டியல் கள்ளன் மட்டக்களப்பில் மக்கள் முன்

மட்டுநகர் கோவில் உண்டியல்களை திருடி வந்தவர் நேற்று மட்டு மணிக்கூட்டு கோபுரத்தில் கட்டி வைக்கப் பட்டிருந்தார்.

நேற்று முன்தினமிரவு அரசடி பிள்ளையார் ஆலய உண்டியலை உடைக்கும் போதே இவர் விடுதலைப்புலிகளிடம் சிக்கினர். (05)

## யாழ் மாவட்ட பாடசாலைகளின் பரீட்சைகளில் புதிய மாற்றம்

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் தற்போது நடைபெற்று வரும் மாதாந்தப் பரீட்சையில் பல புதிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. பல பாடசாலைகளில் இப் பரீட்சை ஒழுங்காக நடைபெருத காரணத்தினலே மேற்படி மாற்றங்கள் செய்யப் படவுள்ளன.

இப் புதிய இட்டத்தின் கீழ் ஒரு பாடசாலையின் பரீட்சை விடைத்தாள்கள் இன்னொரு பாடசாலையினுல் திருத்தப் படும்.இவற்றுக்கு பொறுப்பாக ஒருவர் இருப்பார்,

அத்துடன் இது சம்பந்தமான பரிசோதனை நடவடிக்கைகளை கல்விப் பணிப்பாளர் எந்நேரமும் மேற் கொள்வார், இத்திட்டத்தின் மூலம் மாணவர்களது குறைபாடு ஆசிரியர்களது குறைபாடு என்பன கவனிக்கப்பட்டு கல்வியில் மறு சீரமைப்பு ஏற்படுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இதற்கான சுற்று நிருபங்கள் விரைவில் யாழ் மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு ஆர். சுந்தரலிங்கத்தினுல் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது (03)

### விடுதலைப்புலிகள்...

மகளிர் முன்னணியின்ர் நேற்று அன்னை பூபதி நினைவாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது.

—6ஆம் பக்கம் பார்க்க

### மட்டு...

அன்னை பூபதியின் சொந்த ஊரான மட்டக்களப்பில் எழுச்சி ஊர்வலங்கள்நடைபெறும. மட்டு இந்துக்கல்லூரி மைதானத்தில் மாலை நான்கு மணிக்கு மட்டு,மக்கள் முன்னணி அமைப்பாளர் விசு தலைமையில் கிழக்குப்பகுதி தளபதி கருணு மக்கள் முன்னணி பிரதித்தலைவர் கரிகாலன் பிரான்ஸிஸ் ஜனப் அப்துல் அயூப் திருமதி லோரன் ஆகியோர் உரையாற்றுவார்,

அன்னைபூபதி கிண்ணத்திற்காக நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்னை பூபதியின்கணவர் கணபதிப்பிள்ளை கிண்ணத்தை வழங்குவார் அன்னைபூபதி மலர்வெளியீட்டு விழாவும் கவியரங்கும்வில்லுப் பாட்டு போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

### இடைக்கால...

பெறவுள்ளார் என்றும் கொழும்புபத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இந்த இடைக்கால நிர்வாக சபை மாகாண சபையை தொடர்ந்து நடாத்தவும், மாகாணசபை தேர்தலை கண்காணிக்கவும் உதவும் என்ற யோசனையை ஜனநாயகமக்கள் விடுதலை முன்னணி கடந்த வாரம் அமைச்சர் ஹமீட்டை சந்தித்தபோது எடுத்துக் கூறியது என்றும் அச்செய்தியில் தெரிவிக்கபட்டிருந்தது

வழக்கறிஞர் விக்கிரமபாகுவை

## சிறையில்தடுத்து வைத்தமைக்கு இலங்கை அரசு நஷ்டஈடு

ஜெயந்த விக்கிரபாகு என்றவழக்கறிஞரை ஒருவருடகாலமாக தடுத்து வைக்கப் பட்டமைக்காக இலங்கை அரசு அவருக்கு நஷ்ட ஈடாக பதினையாயிரம் ரூபாவைவழங்கியுள்ளது,

தம்மை தடுத்து வைத்தது தொடர்பாக ஜெயந்த விக்கிரமபாகு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் வழக்கின் தீர்ப்பு நேற்று வெளியிடப் பட்டது.

தற்போது ஜெயந்த விக்கிரமபாகு லண்டனில் தஞ்சமடைந்து வாழ்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது,

## 79 மாணவர்கள் தெரிவு

இந்தக் கல்வியாண்டியில் யாழ் பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தில் பட்ட மேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு 79 மாணவர் தெரிவாகியுள்ளனர்.

இம் மாணவர்கள் அடுத்த மாதம் பதினெராம் திகதி யாழ் பிராந்திய நிலையத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.என யாழ் திறந்த பல்கலைகழகஉதவி பணிப் பாளர் கேட்டுள்ளார்.

அன்னை பூபதிக்கு எமது அஞ்சலி




சித்ராலயா
18, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம் 04191

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் சிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ஆ இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 19.04.1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது